REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 நவம்பர் 11 புதன்கிழமை
# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 88 இல. 268 | November 11,Wednesday, 2020 | 20பக்கங்கள் | 30/-

## கொரோனா தொற்று
# 9000 பேருக்கு மேல் குணமடைந்தனர்



நாட்டில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்தை கடந்துள்ளது.

அந்தவகையில் கடந்த 06

## நாட்டில் கொரோனா தொற்றால் மரணிப்போரின் உடல்களை
# எரிப்பதா? அடக்கம் செய்வதா?
### நிபுணர்களின் ஆலோசனைக்கு அமைய சுகாதார அமைச்சே தீர்மானிக்கும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மரணமடைந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதா? அல்லது எரிப்பதா என்பது தொடர்பில் அரசாங்கம் அல்ல சுகாதார அமைச்சே தீர்மானிக்குமென அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் இம்முறை



### இனம், மத அடிப்படையில் தீர்மானிக்கும் விடயமல்ல என்கிறார் அமைச்சர் மஹிந்த அமரவீர

அமைச்சரவையில் விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ள நிலையில் சுற்றாடல் அமைச்சர் என்ற வகையில் தாமும் அதில் பங்கேற்றதாக குறிப்பிட்ட அமைச்சர், மேற்படி விடயம் தொடர்பில் சர்வதேச வழிகாட்டலுக்கமைய சுகாதார அமைச்சே அதற்கான தீர்மானத்தை எடுக்குமென்றும்

## பிரதமர், புதிய விமானப்படை தளபதி சந்திப்பு



கொழும்பு விஜேராமவிலுள்ள பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை புதிய விமானப்படை தளபதி எயார் மார்ஷல் சுதர்ஷன பதிரன நேற்று முன்தினம் சந்தித்தார். இவர் 18ஆவது விமா...தியாக நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து உத்தியோகபூர்வமாக பிரதமரை சந்தித்து தமது சேவை...ுரையாடியுள்ளார்.





## 100 அடி பள்ளத்தில் வீழ்ந்தது லொறி!
### இருவருக்கு பலத்த காயங்கள்



**ஹற்றன் சுழற்சி நிருபர்**

பூண்டுலோயா பகுதியிலிருந்து கம்பளை பகுதிக்கு நிறப்பூச்சு (பெயின்ட்) வகைகளை ஏற்றிச்சென்ற லொறியொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. பூண்டுலோயா – கொத்மலை பிரதான வீதியில் பாளுவத்த பகுதியில் வைத்து, இந்த லொறி வீதியை விட்டு விலகி சுமார் 100 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது. 06

## தென்னமரவாடி, திரி... தொல்பொருள் திணை...
### சட்டத்தரணி சயந்தனின் சட்டவா...

**அன்புவளிபுரம் தினகரன், றொட்வெவ குறூப் நிருபர்கள்**

திருகோணமலை தென்னமரவாடி, திரியாய் காணிகளில் காணி உரிமையாளர்கள் சுதந்திரமாக சென்று காணியை பராமரிக்க எந்தத் தடையையும் தொல்லியல் திணைக்களம் ஏற்படுத்தக் கூடாது எனவும், அதில் எந்தவித தலையீடுகளையும் தொல்லியல் திணைக்களம் மேற்கொள்ளக் கூடாது எனவும் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்து திருகோணமலை மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் உத்தவிட்டார்.



தாழ்த்தி உத்தரவு பிறப்பிக்கப்படுமாக இருந்தால் அது, மனுதாரரின் உரிமைகளில் ஏற்பட்ட சேதத்தை மீள பெற முடியாத நிலையை ஏற்படுத்திவிடும் என்ற சட்டத்தரணி கேசவன் சயந்தனின் சட்டவாதத்தை ஏற்று நீதிமன்றம் இவ் இடைக்கால தடை உத்தரவை பிறப்பித்தது.

தென்னமரவாடி, திரியாய் ஆகிய பகுதிகளில் உள்ள தமது காணிகளுக்குள் தொல்பொருள் திணைக்களம் வர்த்தமானி பிரசுரம் மூலம் தலையீடு செய்துள்ளதாக திரியாய் பகுதி சார்பாக 17 மனுதாரர்களும், 3 தென்னமரவாடி மனுதாரர்களும் சட்டத்தரணி கேசவன் சயந்தன் 06



# கொரோனா நோயாளிகள் எண்ணிக்கை14,590 ஆனது
### 12 வயது மாணவிக்கும் தொற்று

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகளின் எண்ணிக்கை 14, 590 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மினுவாங்கொடை மற்றும் பேலியாகொடை கொரோனா வைரஸ் கொத்தணியில் 06

# கொரோனா தொற்றால் மேலும் 5 பேர் மரணம்
### உயிரிழப்பு எண்ணிக்கை 41 ஆக அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் கொவிட் 19 தொற்றினால் மேலும் 5 உயிரிழப்பு நேற்று பதிவாகியுள்ளது. இதற்கமைய கொவிட் 19 தொற்றினால் நாட்டில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 41ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் 06

## 460 பொலிஸாருக்கு கொரோனா தொற்று

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொலிஸ் உத்தியோகத்தர்கள் 460 பேருக்கு இதுவரை கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர பிரதேசத்தில் நோய்த் 06

## சதொச மூலம் கட்டுப்பாட்டு விலை அரிசி விற்பனை

மாவட்டச் செயலாளர்கள் மற்றும் அரசாங்க அதிபர்கள் பொறுப்பிலுள்ள நெல் மற்றும் நெற் சந்தைப்படுத்தல் சபையிடமுள்ள நெல் என்பனவற்றை அரிசியாக மாற்றி கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் ஊடாக விற்பனை செய்ய அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

சந்தையில் அரிசிக்கான தட்டுப்பாட்டையும் உத்தரவாத விலைக்கு போதுமான அரிசியை 06





## நாட்டை முடக்கி பொருளாதாரத்தை சீரழிப்பதே எதிரணியின் நோக்கம்
### அமைச்சர் நாமல் ராஜபக்ஷ

நாட்டை முடக்கி பொருளாதாரத்தை முடக்குவது தான் எதிர்கட்சியினரின் நோக்கம் என விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம்(09) இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளித்த போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார். 06



## அவுஸ்திரேலியாவில் சாதனை படைத்த இலங்கை சிறுமி

அவுஸ்திரேலியாவில் சமையல் வல்லுனர் கிண்ணத்தை இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட சிறுமி ஒருவர் வென்றுள்ளார்.

*"Junior Master chef Australia 2020"* என்ற போட்டியில் கலந்து கொண்ட 11 வயதுடைய 06





முன்னர் அரசியலைத் தவிர எதையும் தொடாத தலைவர் இப்ப பேஸ்புக்ல எல்லோருக்கும் பிறந்தநாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கிறார்...

### 06 மாத சலுகைக்காலம், 24 மாத கால மீள் கொடுப்பனவு
# கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட தொழிற்துறையினருக்கு சலுகைகள்
### இலங்கை மத்திய வங்கி நடவடிக்கை

இலங்கையில் கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள



முன்னெடுத்துள்ளது. இதனடிப்படையில் 6 மாதங்களைக் கொண்ட சலுகைக் காலம்

# ரிஷாட் பதியுதீனுக்கு 13வரை விளக்கமறியல்
### கோட்டை நீதவான் நேற்று உத்தரவு



அரச நிதியை முறைகேடாக செலவிட்டமை மற்றும் தேர்தல் சட்டத்தை மீறிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## பிள்ளையான் மீதான வழக்கு; நவம்பர் 24க்கு ஒத்திவைப்பு



**மட்டக்களப்பு சுழற்சி நிருபர்**